# காற்றும் கலைஞரின் பெயர் சொல்லும் திருவாரூரில் திருவுருவச் சிலை!



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்



ஆற்று வெள்ளத்தில் குடிசைகள் தெப்பங்களாக மிதக்கின்றன. ஏழை மக்கள் பரிதவிக்கிறார்கள். வயல்களை சூழ்ந்து பயிர்களை மூழ்கடித்த தண்ணீருடன் விவசாயிகளின் வேதனைக் கண்ணீரும் சேர்ந்து கொண்டது. பாதிக்கப்பட்டவர்களை பார்ப்பதற்காக அவர் வருகிறார். வழியில் ஓரிடத்தில் காரின் வேகம் குறைகிறது. உடனே, அந்தத் தெரு மக்கள் காரை சூழ்ந்துகொண்டு, ஆர்வத்துடன் அவரைப் பார்க்கிறார்கள். அவரோ டிரைவரிடம், “இங்கே ஒத்தையடிப் பாலம்தானே இருக்குது. அதிலே எப்படி கார் போகும்? கல்லுப் பாலம் வழியா போங்க. அப்பதான் பாதிக்கப்பட்ட இடத்துக்குப் போக முடியும்” என்கிறார்.




“எத்தனை ஆண்டுகள் கழித்து இங்கே வந்திருக்கிறார்.. அப்படியிருந்தும் இங்கே ஒத்தையடிப் பாலம்தான் இருக்கிறது என்பதை சரியாக ஞாபகம் வைத்து கல்லுப்பாலம் வழியாகப் போகச் சொல்கிறாரே” என ஆச்சரியப்படுகிறார்கள் தெருவாசிகள். அவருக்கு ஞாபகமில்லாமல் மறந்தா போகும்? அந்த ஊரில் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அவரால்தானே நிறைவேற்றப் பட்டிருக்கிறது! அதனால் எங்கே எந்தப் பாலம் இருக்கிறது, எந்த ரோடு எப்படி இருக்கிறது என்பது அவருக்குத் தெரியாமலா இருக்கும்?

1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருவாரூர் ஓடம்போக்கி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த கலைஞரின் கார், மடப்புரம் பகுதிக்குள் வந்து நின்றபோது தான், ஒத்தையடிப் பாலத்தை அவர் சரியாக நினைவுகூர்ந்து, வேறு வழியாகப் போகும்படி டிரைவரிடம் சொன்னார்.

திருவாரூருக்குப் பழம்பெருமைகள் நிறைய உண்டு. தியாகராஜர் திருக்கோவில், ஆழித்தேர், மனுநீதிச் சோழன் கதையை நினைவூட்டும் கல்தேர், தேவாரம் பாடிய மூவராலும் பாடல் பெற்ற திருத்தலம், கர்நாடக இசை மும்மூர்த்திகள் பிறந்த ஊர் எனப் பல பழம்பெருமைகள் இருந்தாலும் 1970க்கு முன் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட சரிவர இல்லாத ஊராகத்தான் அது இருந்தது. மண்ணின் மைந்தரான கலைஞர் முதல்வரான பிறகுதான் பேருந்து நிலையம், அதனருகே ஆற்றின் குறுக்கே பாலம், அரசு மருத்துவமனை, அரசு கலைக்கல்லூரி, அரசு அலுவலகக் கட்டடங்கள், ஊர் மக்களின் தாகம் தீர்க்கும் குடிநீர்த் தொட்டி, தேரோடும் சாலைகளின் மேம்பாடு எனப் பலவற்றையும் அமைத்தார். இவைகூட இல்லாத திருவாரூர், அதற்கு முன் எப்படி இருந்திருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.

அ.தி.மு.க ஆட்சி அமைந்தாலே திருவாரூர் என்ற நகரம் ‘சிட்டிசன்’ படத்தில் வரும் அத்திப்பட்டு போல அரசாங்க வரைபடத்திலிருந்து தானாக மறைந்துவிடும். 1977 முதல் 1987 வரையிலான எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் திருவாரூக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பலவும் புறக்கணிக்கப்பட்டன. கலைஞர் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் கிடப்பில் போடப்பட்டது. புறவழிச்சாலை திட்டத்தின் கதியும் அதுதான். திருவாரூரைத் தலைநகராகக் கொண்டுதில்லையாடிவள்ளியம்மை மாவட்டம் அமைக்கப்படும் என்று எம்.ஜி.ஆர் அறிவித்ததோடு சரி. அப்படியொரு மாவட்டமே உருவாக்கப் படவில்லை.

1989ல் மீண்டும் அமைந்த தி.மு.க. ஆட்சி இரண்டாண்டுகளிலேயே கலைக்கப்பட்டதால் கலைஞரால் பெரிய திட்டங்கள் எதையும் நிறைவேற்ற முடியவில்லை. மருத்துவமனை விரிவாக்கம், கல்லூரி விரிவாக்கம் போன்றவை நிறைவேறின. 1991ல் ஜெயலலிதா முதல்வரான பிறகு, திருவாரூருக்குப் பதில் நாகையை மாவட்டத் தலைநகராக்கி காயிதே மில்லத் மாவட்டத்தை உருவாக்கினார். புயலில் சேதமடைந்த திருவாரூர் பெரியகோவில் கோபுரத்தையும் கலசத்தையும்கூட சீர்ப்படுத்தவில்லை. 1996 வரை திருவாரூரை சீந்துவாரில்லை. 1996 பொதுத்தேர்தலில் தி.மு.க மகத்தான வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தது.

திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு திராவிட இயக்கத்தின் முன்னோடித் தலைவரான ஏ.டி.பன்னீர்செல்வம் பெயரில் புதிய மாவட்டத்தை உருவாக்கினார் கலைஞர். தென்மாவட்டங்களில் ஏற்பட்ட சாதி மோதல்களால் தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள்போக்குவரத்துக்கழகங்கள் உள்ளிட்டவற்றுக்கு வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களெல்லாம் நீக்கப்பட்டபோது ஏ.டி. பன்னீர்செல்வம் பெயரும் நீக்கப்பட்டு வெறும் திருவாரூர் மாவட்டமானது.

தொன்மையான திராவிட கட்டடக் கலை வடிவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அமைத்து, அதன் நிர்வாகத்தை நவீனமான கணினி முறைக்கு உட்படுத்தியவரும் கலைஞர்தான். திருவாரூரை தமிழ்நாட்டின் முன்னோடி கணினி மாவட்டமாக்கி, நிர்வாகத்தை மேம்படுத்தினார்.

பெரிய கோவில் அருகேயுள்ள வற்றவே வற்றாத சுமார் 35 ஏக்கர் பரப்பளவுள்ள கமலாலயம் குளம் அழுக்கடைந்து நாற்றம் வீசியதால், தண்ணீரை இறைத்து அதனைத் தூர் வாரியதும் கலைஞரின் ஆட்சியில்தான். பெரிய கோவிலுக்கு வரும் பக்தர்கள் கமலாலயம் குளத்தின் நடுவில் உள்ள கோவிலுக்குச் செல்லும் வகையில் படகுப் போக்குவரத்து வசதியும் உருவாக்கப்பட்டது. 2001ல் மீண்டும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க ஆட்சி. திருவாரூர் மறுபடியும் சிட்டிசன் படத்தின் அத்திப்பட்டு கிராமமானது.

2006ல் ஐந்தாம் முறையாக கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் திருவாரூர் புத்துயிர் பெற்றது. அரசு மருத்துவக்கல்லூரியுடன் கூடிய



பெரிய மருத்துவ மனை, அகல ரயில் பாதைத் திட்டம் நிறைவேற்றம், பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவு, மத்திய பல்கலைக்கழகம் தொடக்கம் எனப் பலவும் கலைஞரின் முயற்சியால் உருவாயின. உள்கட்டமைப்பு வசதிகள் பெருகியதால் நகரத்தின் பரப்பளவு விரிந்தது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளும் வளர்ச்சி பெற்றன. திருவாரூர் நகராட்சிக்கான புதிய கட்டடம் கலைஞர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டதுடன் அதற்கு அவர் பெயரே சூட்டப்பட்டது.

சொந்த மண்ணுக்கு என்ன தேவை என்று ஊர்க்காரர்களும் அங்குள்ள கட்சிப் பிரமுகர்களும் வலியுறுத்துகிறார்களோ அவற்றையும், அவர்கள் யாரும் கேட்காமலேயும் நிறைவேற்றிக் கொடுத்தவர் கலைஞர்.

தற்போதைய புதிய பேருந்து நிலையம் உள்பட திருவாரூருக்கு கலைஞர் அரசு உருவாக்கித் தந்த திட்டங்கள் செயல்படுத்துவதில் மாவட்டஉள்ளூர் நிர்வாகங்கள் பலமுறை சொதப்பியதும் உண்டு.



தன்னை வளர்த்த மண்ணை, தான் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மேலும் மேலும் வளர்த்த கலைஞரை, கட்சி எல்லைகளைக் கடந்து திருவாரூர் மக்கள் தங்கள் மனதில் தனி சிம்மாசனம் போட்டு உட்கார வைத்திருக்கிறார்கள். அதனால்தான் வெற்றி நாயகராக சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாக திருவாரூர் தொகுதியில் போட்டியிட்டு தன் தேர்தல் அரசியல் வரலாற்றில் 13 வது வெற்றியாக 2016ல் தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தனர் நன்றி மறவாத திருவாரூர் மக்கள். மாற்றுக்கட்சியினர்கூட தங்கள் குடும்பத்தில் ஒருவரை கலைஞருக்கு வாக்களிக்கச் செய்தனர்.

2011, 2016 தேர்தல்களில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததால் திருவாரூர் மீண்டும் புறக்கணிக்கப்பட்டது. ஆனாலும் திருவாரூர் மக்கள் தி.மு.க. மீதே நம்பிக்கை வைத்தனர். சட்டமன்றத் தேர்தல் வரலாற்றில் இதுவரை திருவாரூரில் ஒரு முறை கூட இரட்டை இலை வென்றதே கிடையாது.

உதய சூரியனுக்கு விழும் வாக்குகள் கலைஞருக்கான நன்றி காணிக்கை. அந்த நன்றியின் அடையாளமாக மாவட்டக் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலையை திருவாரூரில் வழியெங்கும் மக்களின் ஆர்ப்பரிப்பான வரவேற்புடன் முதலமைச்சர் திறந்து வைத்திருக்கிறார்.

ஆரூர் தியாகேசனின் ஆழித் தேரை நவீன தொழில்நுட்பத்துடன் ஓடச் செய்த கலைஞர் அந்த தேரின் வடிவத்தில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தை அமைத்தார். திராவிட மாடல் ஆட்சியின் நாயகரான மாண்புமிகு முதலமைச்சர் அந்த வள்ளுவர் கோட்ட வடிவில் திருவாரூர் காட்டூரில் கலைஞர் கோட்டத்தை வரலாற்றுச் சின்னமாக வடித்துள்ளார்.

இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் சொன்ன ஓடம்போக்கி ஆற்றின் அந்த ஒத்தையடி பாலம், சிலைக்கு அருகில் தான் இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் தற்போது அங்கே அகலமான பாலம் அமைக்கப்பட்டு வருகிறது.

திருவாரூரில் நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அணி ஆரூரானை மறக்கலும் ஆமே.